## மார்ச் - 17- சனி

### தூய பத்திரிசியார்

### கடவுளே என் கேடயம்: நேரிய உளத்தோரை அவர் விடுவிப்பார். திபா. 7:10

### முதல் வாசகம் : ஏரேமியா 11 : 18 – 20

ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார் நானும் புரிந்து கொண்டேன். பின்னர் நீர் அவர்களின் செயல்களை எனக்குக் காட்டினீர். வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறிபோல் இருந்தேன் அவர்கள் எனக்கு எதிராய், "மரத்தைப் பழத்தோடு அழிப்போம் வாழ்வோரின் நாட்டிலிருந்து அவனை அகற்றிவிடுவோம் அவன் பெயர் மறக்கப்படட்டும்" என்று சொல்லிச் சதித் திட்டம் தீட்டியதை நான் அறியாதிருந்தேன். டைகளின் ஆண்டவரே, நீர் நேர்மையோடு தீர்ப்பிடுபவர் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் சோதித்தறிபவர் நீர் அவர்களைப் பழிவாங்கு வதை நான் காணவேண்டும். ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்

### நற்செய்தி : யோவான் 7 : 40 – 53

அக்காலத்தில் யூதர்களின் திருவிழாக் கூட்டத்தில் சிலர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, "வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே" என்றனர். வேறு சிலர், "மெசியா இவரே" என்றனர். மற்றும் சிலர், "கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்? தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது?" என்றனர். இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது. சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் யாரும் அவரைத் தொடவில்லை. தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பியிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பி வந்தார்கள். அவர்கள் காவலர்களிடம், "ஏன் அவனைப் பிடித்துக்கொண்டு வரவில்லை?" என்று கேட்டார்கள். காவலர் மறுமொழியாக, "அவரைப் போல எவரும் என்றுமே பேசியதில்லை" என்றனர். பரிசேயர் அவர்களைப் பார்த்து, "நீங்களும் ஏமாந்து போனீர்களோ? தலைவர்களிலாவது பரிசேயர்களிலாவது அவனை நம்புவோர் யாராவது உண்டா? இம்மக்கள் கூட்டத்துக்குத் திருச்சட்டம் தெரியாது. இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்றனர். அங்கிருந்த பரிசேயருள் ஒருவர் நிக்கதேம். அவரே முன்பு ஒரு நாள் இயேசுவிடம் வந்தவர். அவர் அவர்களிடம், "ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?" என்று கேட்டார். அவர்கள் மறுமொழியாக, "நீரும் கலிலேயரா என்ன? மறைநூலைத் துருவி ஆய்ந்து பாரும். அப்போது கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் யாரும் தோன்றுவதில்லை என்பதை அறிந்துகொள்வீர்" என்றார்கள். (அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்குச் சென்றார்கள்.)

**தியானம்:** ஒருவரின் வாக்குமூலத்தைக் கேளாது, என்ன செய்தாரென்று அறியாது தீர்ப்பளிப்பது முறையாகுமா?" பிறரைத் தீர்ப்பிடும் உரிமை இறைவனுக்கும், அவரால் நியமிக்கப்பட்ட நடுவர்களுக்கும் மட்டுமே உரிய பணி. மற்ற எவருக்கும் தீர்ப்பளிக்கும் உரிமை இல்லை. பல நேரங்களில் என்ன நடந்தது என்பதைத் தொடர்புள்ள மனிதரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல், வதந்திகளையும், அவதூறுச் செய்திகளையும் எளிதில் நம்பி பிறரைத் தீர்ப்பிட்டுவிடும் நமக்கு ஓர் எச்சரிக்கையாக நற்செய்தி வார்த்தைகள் அமைகின்றன. ஆதிகாரம், பணபலம், பதவி முன்னிலைப்படுவதால் வாக்குமூலத்தை வாங்காது, குற்றத்தை உறுதிப்படுத்தாது அப்பாவிகளைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடுவது இயேசுவின் காலத்திலிருந்தே தொடருவதனால், அப்பாவிகள் தண்டிக்கப்படுவது சாதாரணமாகிவிட்டது. நிக்கதேம் இயேசுவைத் தேடி இரவில் வந்த பரிசேயர். யூத சமயத்தில் மிகுந்த பிடிப்புள்ளவர். இயேசுவைக் குறித்து குறுகிய பார்வையினராக இல்லாமல் அதிகமாக அறிய விரும்பி சந்திக்கச்சென்றாலும் பயந்து, தயங்கிக்கொண்டே இயேசுவை அணுகினார். பிறர் தம்மைப்பற்றித் தவறாக நினைப்பார்களோ எனப்பயம். ஆனால் திறந்த மனம் கொண்டவராக இருந்ததால் இயேசுவின்பால் ஈர்க்கப்பட்டார். இயேசுவின் எதிரிகள் ஒன்றுசேர்ந்து இயேசுவுக்கு எதிராக சதித்திட்டம் வகுத்தபோது அவர்களைத் துணிந்து எதிர்த்து இயேசு உண்மையிலேயே குற்றம் செய்தார் என்றால் அவருடைய குற்றம் யாது என விசாரித்து அறியாமல் அவருக்கு எதிராகத் தீர்ப்பளிப்பது முறையல்ல என வாதாடினார். நிக்கதேம் இயேசுவிடம் கொண்ட நம்பிக்கை படிப்படியாகத்தான் வளர்ந்தது. நம் வாழ்விலும் நம்பிக்கை என்பது வளர்ச்சிக்கு உட்பட்டதே. சில வேளைகளில் நாம் உறுதியான நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றோம். ஆனால் வேறு தருணங்களில் கடவுளின்மீது நாம் கொள்ளும் நம்பிக்கை தளர்ந்துபோய்விடுகிறது. நம்பிக்கை என்பது கடவுளின் கொடை. ஆனால் அதை நன்றியோடு ஏற்று நம்மில் வளரச்செய்வது நம் பொறுப்பு. நாமும் பிறருக்கு வாழ்வளிக்கும் வார்த்தைகளைப் பேசுவோம் இறைவனை புகழ்ந்து போற்றுவோம். இறையருளை நிறைவாய்ப் பெறுவோம்.